புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com




ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஏப்ரல் 10, 2025 • புரட்சி 25 • முழக்கம் 13 • விலை ரூ.3.00

# மோடி நடத்துவது “உயர்ஜாதி” ஆட்சி

“பார்ப்பன உயர் ஜாதி சுரண்டலுக்கு வழிவகுக்கும் ஜாதி அமைப்பு. இதுகுறித்து நான் ஆழமாக ஆராய்ந்தேன். இந்த நாட்டில் பார்ப்பன உயர் ஜாதியில் பிறக்காத ஏனையோர் இரண்டாம் தர குடிமக்களாகவே இருக்கின்றனர்” என்று ராகுல் காந்தி பேசியுள்ளார்.

கடந்த ஏப்ரல் 7-ஆம் தேதி பாட்னாவில் நடந்த ‘அரசியல் சட்டத்தை காப்போம்’ மாநாட்டில் ராகுல் காந்தி பேசினார். மூன்றாவது முறையாக பீகார் வந்துள்ளார் ராகுல் காந்தி, “காந்தியடிகள் உண்மையின் சோதனை நூலை எழுதினார். மோடி பொய்களின் சோதனையை எழுதிக் கொண்டிருக்கிறார்” என்று கூறி ஆர்எஸ்எஸ் அமைப்பை கடுமையாகத் தாக்கினார்.



மேலும் அவர் பேசியதாவது: அரசியல் சட்டம் சாவர்க்கரின் சிந்தனை அல்ல; மாபெரும் தலைவர்களான காந்தி, நேரு, அம்பேத்கர் ஆகியோரின் சிந்தனையைக் கொண்டது. இப்போது நடக்கும் ஆட்சி பார்ப்பன உயர்ஜாதி நலனுக்காகவே நடக்கிறது. தாழ்த்தப்பட்ட பழங்குடியின பிற்படுத்தப்பட்ட மக்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். இந்த நாட்டில் நீங்கள் பார்ப்பனராகவோ, உயர் ஜாதியினராகவோ பிறக்காவிட்டால் இரண்டாம் தர குடிமக்கள் தான். இதை நான் உறுதியாகச் சொல்கிறேன்.

இந்த ஜாதிஅமைப்பை நான் கூர்மையாக கவனித்துக் வருகிறேன். தெலுங்கானாவில் ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது அதனடிப்படையில் இட ஒதுக்கீட்டை உயர்த்தியுள்ளோம். நான் மோடியிடம் நேரடியாகவே சொன்னேன். இட ஒதுக்கீட்டை உங்களால் முடிவுக்கு கொண்டு வர முடியாது. நீங்கள் போடும் தடுப்புச் சுவரை நாங்கள் உடைப்போம். 50 விழுக்காடிற்கு மேல் இட ஒதுக்கீடு கூடாது என்ற வரம்பை உடைத்துக் காட்டுவோம்.

சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை கடந்த 4 ஆண்டுகளாக குறைந்து வந்தாலும் பெட்ரோல், டீசல் விலையை இந்த ஆட்சி குறைக்க மறுக்கிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களுக்காக இந்த ஆட்சி நடக்கிறது. காங்கிரஸ் கட்சியிலும் நாங்கள் மாற்றங்களை செய்து வருகிறோம். பல மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் பார்ப்பனர்களாகவும், உயர் ஜாதிக்காரர்களாகவும் இருந்து வந்தார்கள்.

இப்போது கட்சிப் பொறுப்புகளில் மூன்றில் இரண்டு பங்கு தலித் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்குகிறோம்.நானும் தலைவர் கார்க்கே அவர்களும் காங்கிரஸ் கட்சி பிற்படுத்தப்பட்ட, தலித் மக்களுக்காகவும், பெண்களுக்காவும் போராட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறோம்” என்று பேசினார்.

## “சேலம் பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் மீது நடவடிக்கை வேண்டும் தமிழ்நாடு முதல்வருக்கு திராவிடர் விடுதலைக் கழகம் கோரிக்கை !”

**இது குறித்து கழகத் தலைவர் “கொளத்தூர் மணி” அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை** : ஆளுநரின் அதிகாரங்கள் குறித்து ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் வழங்கி இருக்கிறது. இந்தத் தீர்ப்பின் வழியாக தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றிய சட்ட முன்வரைவுகளுக்கு ஒப்புதல் என்பதோடு, ஆளுநரின் அதிகார வரம்புகள் என்ன என்பது குறித்தும், ஒப்புதல் வழங்குவதற்கான கால வரையறை குறித்தும் இந்த தீர்ப்பு தெளிவுபடுத்தி இருக்கிறது.

இந்தத் தீர்ப்பினால் மும்மொழிக் கொள்கை ஆனாலும், நாடாளுமன்ற தொகுதிகள் மறுவரையறை ஆனாலும் வழிகாட்டி மாநிலமாக திகழும் தமிழ்நாடு, அதன் செயல்திறன் மிக்க முதலமைச்சர் இந்த வகையிலும் இந்திய ஒன்றியத்தில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும், குறிப்பாக ஒன்றிய ஆளுங்கட்சி ஆளாத மாநிலங்களுக்கு ஒரு புதிய தெம்பினை ஊட்டி இருக்கிறார். அதற்காக நாம் தமிழ்நாடு முதலமைச்சரை மனம் நெகிழ்ந்து பாராட்டுகிறோம்.

மேலும் இந்தத் தீர்ப்பு ஒப்புதல் வழங்கிய சட்ட த்தின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களின் வேந்தராகவும் முதல்வரே ஆகிவிடுகிறார் என்பதும் கூடுதல் மகிழ்ச்சியான ஒன்றாகும். ஏனெனில் உயர்கல்வியில் உள்ள அனைத்து அதிகாரங்களும் தனக்கு மட்டுமே என்ற ஆணவத்தோடு ஆளுநர், துணைவேந்தர்களாக இந்துத்துவாதிகளை நியமிப்பதும், அவர்கள் வழியாக தேவையற்ற இந்துத்துவ செயல்பாடுகளை நிறைவேற்றுவதும், தனியாக துணைவேந்தர்கள் கூட்டத்தை நடத்துவதும், பெரியார், அண்ணா, கலைஞர் ஆய்வுகளுக்காக எழுதப்படுகிற நூல்கள் கூட முன் அனுமதி பெறாததைக் காரணமாகக் காட்டி நடவடிக்கை எடுப்பதுமான திமிர் நடவடிக்கைகளில் துணைவேந்தர்கள், குறிப்பாக பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஈடுபடுவதற்குப் பெரும் உந்துதலாகவும் ஆளுநர் இருந்திருக்கிறார் என்பதையும் இந்த வேளையில் நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் மீது விதி மீறல்களுக்காகவும், ஊழல் நடவடிக்கைகளுக்காகவும் கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கான மேல் நடவடிக்கை இல்லாமலும், அவரது காலக்கெடு முடிந்த பின்னாலும் அதை நீட்டிப்பதும் என்றவாறு ஒரு இந்துத்துவவாதியை வளர்ப்பதும், பாதுகாப்பதும் ஆன பல நடவடிக்கைகள் எவ்வித தடங்கலும் இன்றி நடந்து கொண்டே இருந்தன.

ஒன்றிய பாஜக அரசின் ஊதுகுழலாக இருந்து வரும் பெரியார் பல்கலைக் கழக துணை வேந்தர்மீது, பல்கலைக் கழக வேந்தராக ஆகி உள்ள தமிழக முதல்வர் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டுமாறு கோருகிறோம்.

சேலம் பெரியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தனது பணிக்காலத்தில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதை தமிழ்நாடு அரசு நியமித்த பழனிச்சாமி இ.ஆ.ப தலைமையிலான விசாரணைக் குழு உறுதி செய்து அரசிடம் அறிக்கை அளித்தது. அந்த அறிக்கையினை அரசு ஆளுநருக்கு அனுப்பிய நிலையில் இன்று வரை ஆளுநர் அதன்மீது எவ்வித நடவடிக்கை எடுக்கவும் அனுமதி வழங்கவில்லை.

200 புள்ளி இட ஒதுக்கீட்டிற்கு எதிராக நூலகர், உடற்கல்வி இயக்குநர் பணி நியமனங்கள் நடைபெற்றன.

தமிழ்த் துறைத் தலைவர் பெரியசாமி போலிச் சான்றிதழ் விவகாரம் விசுவரூபம் எடுத்த நிலையில் ஆட்சிக் குழுவில் அவர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை நடவடிக்கை எடுக்காமல் துணை வேந்தர் ஒரு தனித் தீர்மானத்தை கொண்டு வந்து பெரியசாமி மீதான விவகாரம் மீது எவ்வித நடவடிக்கை எதுவும் எடுக்காமல் அது இன்னமும் கிடப்பில் உள்ளது.

200 புள்ளி இட ஒதுக்கீட்டில் பட்டியலின அருந்ததியினருக்கு கிடைக்க வேண்டிய தமிழ்த் துறை பேராசிரியர் பதவி பட்டியலினத்திற்கு கிடைக்கவில்லை; மாறாக பொதுப் போட்டிக்கு சென்றது.

அதேபோல் மேலாண்மைத் துறை இணைப்பேராசிரியர் யோகானந்தன், தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் சுந்திரமூர்த்தி, நூலக அறிவியல் பேராசிரியர் முருகன் ஆகியோர் அருந்ததியினருக்கு கிடைக்க வேண்டிய இட ஒதுக்கீட்டினை அவர்களுக்கு கிடைக்காமல் பொதுப் போட்டி மூலம் நிரப்பப் பட்டு ஆதாயம் பெற்றுள்ளனர். இது முற்றிலும் இட ஒதுக்கீட்டிற்கு முரணானது. இதன் மீது வேந்தராக ஆகி உள்ள முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊழல் புகாரில் சிக்கியிருக்கும் முன்னாள் பதிவாளர் தங்கவேலுவை கைது செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் பெரியார் பல்கலைக் கழக வேந்தராக ஆகி உள்ள தமிழ்நாடு முதல்வரைக் கேட்டுக்கொள்கிறது.

- “கொளத்தூர் மணி,” தலைவர்,
திராவிடர் விடுதலைக் கழகம்.
*08.04.25*

## ம.பி.யில் பார்ப்பனரின் ‘இன ஒதுக்கல்’
### சனாதன இந்துக்களுக்கு மட்டும் தனிக் கிராமம்!

சனாதன இந்துக்களுக்கு மத்தியப் பிரதேச மாநிலத்தில் தனி கிராமம் ஒன்றை உருவாக்கி வருகிறார். அனுமார் கோயில் பார்ப்பன அர்ச்சகர். 1000 சனாதன இந்துக்கள் இந்த கிராமத்தில் குடியேறுகிறார்கள். சனாதனத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த கிராமத்தில் நுழைய தடை விதிக்கப்படும். அரசியல் சட்டத்திற்கு எதிரான இந்த தனிக் குடியிருப்புக்கு மாநில பாஜக ஆட்சி பச்சைக்கொடி காட்டியுள்ளது.

இந்துக்கள் மட்டும் வாழும் முதல் கிராமம் ம.பி. பாகேஷ்வர் அனுமர் கோயில் சார்பில் அமைகிறது. பாஜக ஆளும் மத்தியப் பிரதேச மாநிலம் கன்ஞ் மாவட்டத்தின் சத்தர்பூரில் உள்ளது கதா கிராமம். இங்கு பிரசித்தி பெற்ற ‘பாகேஷ்வர் தாம்’ எனும் அனுமர் கோயில் உள்ளது.

இதன் தலைமை அர்ச்சகர் திரேந்திர கிருஷ்ண சாஸ்திரி, பாகேஷ்வர் தாம் ஜன் சேவா சமிதி என்ற சமூக நல அமைப்பின் தலைவராகவும் உள்ளார். இந்த அமைப்பின் சார்பில் கோயிலுக்கு அருகில் உள்ள பரந்த பகுதியில் ஒரு இந்து கிராமத்தை உருவாக்க இதற்காக திட்டமிட்டுள்ளார். இதற்காக அவர் பூமி பூஜை செய்து கட்டிட வேலைகளையும் தொடங்கி வைத்துள்ளார் இந்தியாவின் முதல் இந்து கிராமமாக இது அடுத்த 2 ஆண்டுகளில் அமைக்கப்பட உள்ளது.

சனாதனத்தை பின்பற்றாதவர்கள் இந்த கிராமத்தில் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். இது குறித்து திரேந்தர் சாஸ்திரி கூறும்போது, “இந்து தேசத்தின் கனவு ஓர் இந்து வீட்டில் இருந்து தொடங்குகிறது. ஒரு இந்து வீடு, இந்து கிராமம், இந்து மாவட்டம், இந்து மாநிலம் மற்றும் இந்து அரசு ஆகியவற்றைக் கொண்ட பின்னரே, இந்து தேசம் எனும் கனவு நிறைவேறும்.

நான் அமைக்கும் இந்த கிராமம் 1,000 இந்து குடும்பங்கள் வசிக்கும் வகையில் தயாராகிறது. இந்து மதம் மற்றும் சனாதன தர்மத்தைப் பின்பற்றுபவர்களுக்கு இக்கிராமத்தில் நிலம் வழங்குகிறோம். இதற்காக சமிதியால் இலவசமாக வழங்கப்படும் நிலத்தை மற்றவர்கள் வாங்கவோ, விற்கவோ முடியாது. இக்கிராமத்தில் இந்துக்கள் அல்லாதவர்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. சனாதனத்தில் நம்பிக்கை கொண்டிருந்தால் கிராமத்துக்குள் வரலாம்” என்றார்.

முன்னதாக, ஒரு வீடியோ வெளியிட்ட திரேந்தர் சாஸ்திரி, “இந்து கிராமம் உருவாக்குவதற்கு முன்பாக, ஒவ்வொரு வீட்டிலும் கிராமத்திலும் தீவிர இந்துக்களை உருவாக்கும் பணி தொடங்கும். இதற்கான பிரச்சாரம் இந்த மாதம் தொடங்குகிறது” என்றார்.

### தலையங்கம்

# வீழ்த்தப்பட்டது ரவி அல்ல, அமித்ஷா!

மாநில அரசை விருப்பம் போல கலைத்து விளையாடிய ஒன்றிய அரசுக்கு, 1994–இல் `எஸ்.ஆர்.பொம்மை வழக்கு' கடிவாளம் போட்டதைப் போல, ஆளுநர்களின் எதேச்சிகாரப் போக்குக்குக் கடிவாளம் போடும் தீர்ப்பை தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு போராடி வென்றிருக்கிறது. பல்கலைக்கழக வேந்தர் பொறுப்பு தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட 10 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்திய ஆர்.என்.ரவிக்கு எதிராக தி.மு.க. அரசு தொடர்ந்த வழக்கில், “சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை நிறுத்திவைக்க ஆளுநருக்கு அதிகாரமில்லை, மாநில அரசைப் பின்பற்றித்தான் ஆளுநர் செயல்பட முடியும். தன்னிச்சையாகச் செயல்படக்கூடாது. ஆளுநர் ஆர்.என்.ரவி அரசியலமைப்புச் சட்டத்தை மீறியுள்ளார்” என்று தீர்ப்பிலேயே கண்டித்துள்ளது.

மேலும், “அரசியலமைப்பில் ஆளுநருக்கு வீட்டோ (Veto) அதிகாரம் கிடையாது. மசோதாக்கள் மீது முடிவெடுப்பதில் தேவையற்ற தாமதம் கூடாது. இரண்டாவது முறையாக மசோதா அனுப்பப்படும்போது அதனை குடியரசுத் தலைவருக்கு பரிந்துரைக்கும் வாய்ப்பு ஆளுநருக்கு இல்லை. ஆளுநர் தனது ஒப்புதலை வழங்க வேண்டும் என்பது சட்டத்தில் தெளிவாக உள்ளது” என்றும் நீதிபதிகள் பர்திவாலா, மகாதேவன் அமர்வு தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதுமட்டுமில்லாமல் உச்சநீதிமன்றத்திற்குள்ள பிரிவு 142 –இன் படி சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, 10 மசோதாக்களுக்கும் நீதிபதிகளே ஒப்புதல் அளித்தனர். ஆளுநர்கள் கால தாமதம் செய்வதை தடுக்க, அதிகபட்சமாக 3 மாதங்களுக்குள் மசோதாக்கள் மீது முடிவெடுக்கவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். அனைத்து மாநில முதல்வர்களுக்கும் சுதந்திர தினத்தில் தேசியக் கொடி ஏற்றும் உரிமையை கலைஞர் பெற்றுத் தந்ததை போல, அனைத்து மாநில சட்டமன்றங்களின் உரிமையை மீட்டுத் தந்திருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

இந்தத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்கவும், நீக்கவும் தமிழ்நாடு அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது. இனி துணைவேந்தர்களை நியமிப்பதில் ஆளுநருக்கு எந்த பங்கும் கிடையாது. ஆர்.என்.ரவியின் செயல்படாத் தன்மையால் தற்போது சுமார் 10 பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் இல்லை. தமிழ்நாடு அரசு உடனடியாக அந்த பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிப்பதற்கான பணிகளை மேற்கொண்டு, மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதை தடுக்க வேண்டும்.

அதேபோல ஆர்.என்.ரவியால் நியமிக்கப்பட்ட பெரியார் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜெகநாதன் மீது இடஒதுக்கீடு விதிகளை மீறியது, போலிச்சான்றிதழ் அளித்தவர்களை பணியில் அமர்த்தியது, துறைத்தலைவர்களை சுழற்சி முறையில் நியமிக்காதது, துணைவேந்தர் முன்னரே முடிவு செய்தவர்களை பணி நியமனம் செய்தது என அடுக்கடுக்கான புகார்கள் உள்ளன. ஊழல் புகாரில் கைது செய்யப்பட்டு ஜாமினில் வந்தவரை ஆளுநர் தான் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். மேலும் பா.ஜ.க.வின் இந்துத்துவ செயல்திட்டங்களை பல்கலைக்கழகத்திற்குள் புகுத்துவதையும் வாடிக்கையாகக் கொண்டுள்ளார் ஜெகநாதன். எனவே பல்கலைக்கழக துணைவேந்தர்களை கையாளும் முழு அதிகாரம் பெற்ற, திராவிட மாடல் அரசு ஜெகநாதனை பொறுப்பில் இருந்து விடுவித்துவிட்டு, அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, கடந்த 4 ஆண்டுகளில் எழுவர் விடுதலை, ஆன்லைன் ரம்மி சூதாட்டத் தடை சட்டம் போன்ற வழக்குகளில் ஆளுநருக்கு எதிராக பல வெற்றிகரமான தீர்ப்புகளைப் பெற்றுள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து மறுத்துவந்த மருத்துவப் படிப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கான அகில இந்திய ஒதுக்கீட்டையும் சட்டப் போராட்டம் நடத்தி வென்றது. அதன் தொடர்ச்சியாக இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மாநிலங்களின் உரிமைகளை நிலைநாட்டிடும் வகையில், ஆளுநர்கள் அதிகார வரம்பைச் சுருட்டி கட்டுக்குள் வைக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை தற்போது பெற்றுள்ளது.

இவ்வேளையில் மற்றொரு வரலாற்றுச் சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். 2001–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்த பாத்திமா பீவி, டான்சி வழக்கில் ஜெயலலிதா குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட பின்பும், அரசியலமைப்பை மீறி ஜெயலலிதாவுக்கு பதவிப்பிரமாணம் செய்துவைத்து நெருக்கடிக்கு ஆளானார். ஜெயலலிதாவையும், அவருடைய அமைச்சரவையையும் உச்சநீதிமன்றம் தகுதிநீக்கம் செய்து உத்தரவிட்டது. இவ்விவகாரத்தில் அரசியலமைப்புக்கு விரோதமாகச் செயல்பட்ட பாத்திமா பீவியும் உடனடியாக பதவியை ராஜினாமா செய்தார்.

அதுபோல, தற்போது உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு பின்பு, தனது தவறுகளுக்கு தார்மீக பொறுப்பேற்று ஆர்.என்.ரவியும் பதவியை ராஜினாமா செய்திருக்க வேண்டும். ஆனால் ஆர்.என்.ரவி அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் எப்படி ஐ.பி.எஸ். அதிகாரியாக இருந்த அண்ணாமலை அரசியலில் பா.ஜ.க.–வால் ஏவி விடப்பட்டாரோ, அதுபோல ஆளுநர் பதவிக்கு ஏவி விடப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி ஆர்.என்.ரவி. பா.ஜ.க.–வின் ஏவல் ஊழியரான ஆர்.என்.ரவி சுயமாக சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் கொண்டவர் அல்ல; பா.ஜ.க. எடுக்கும் முடிவுக்கு கட்டப்பட்டவர் அவர். ஆக, திராவிட மாடல் அரசு தற்போது நிலைநாட்டியிருக்கும் மாநில உரிமை என்பது, ஆளுநர் ஆர்.என்.ரவியை எதிர்த்து அல்ல; அமித் ஷா, நரேந்திர மோடியை எதிர்த்து என்பதே நமது கருத்து.

மாநில உரிமை மீட்புப் போரில் பா.ஜ.க.–வுக்கு எதிராக உறுதியோடு நிற்கும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை பாராட்டுவோம். துணை நிற்போம்.

# வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம்!

தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு நான்கு ஆண்டுகளை நிறைவு செய்யும் தருவாயில் உள்ளது. இந்த 4 ஆண்டுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றினால் எட்டப்பட்ட பலன்கள் என்னவென்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றன.

அந்தவகையில் 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, 9.69% என அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட 8% வளர்ச்சி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆய்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட 9.3% வளர்ச்சி ஆகியவற்றை விடவும் அதிகமான வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு எட்டியிராத அதிகபட்ச வளர்ச்சி என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை இந்த ஆண்டு பதிவு செய்திருப்பது தமிழ்நாடுதான். குறிப்பாக சேவைகள் துறை 12.7%, இரண்டாம் நிலை துறைகள் 9% வளர்ச்சி கண்டுள்ளன. ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் குஜராத், பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள், தங்கள் மாநிலங்களின் 2024-25-ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதத் தரவுகளையே இன்னும் பதிவு செய்யவில்லை.

இந்த வளர்ச்சியை தமிழ்நாடு எந்த சூழலுக்கு மத்தியில் எட்டியுள்ளது என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. வரிப்பகிர்வில் ஒன்றிய அரசு இழைத்த அநீதியால் 4% வருவாயை இழந்திருக்கிறது தமிழ்நாடு. ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கெடுக்கும் திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்கை தொடர்ந்து குறைத்துக்கொண்டே வருகிறது பாஜக அரசு. உதவி மானியங்களில் தமிழ்நாடு 2.09% வீழ்ச்சியை கண்டிருக்கிறது. ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகை 3 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. புயல் நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ள 37,000 கோடி ரூபாயில் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் பெயர் கூட அதில் இடம்பெறவில்லை. மற்ற பெரிய திட்டங்கள் எதையும் தமிழ்நாடு மோடி ஆட்சியிடம் இருந்து பெறவில்லை. மதுரை எய்ம்ஸ் மட்டும் ஒற்றைச் செங்கல்லை நட்டு வைத்ததுடன் நிற்கிறது. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவைத்தொகை உள்ளது. கல்வி திட்டத்திற்கான நிதியில் 2,152 கோடி ரூபாய் நிலுவைத்தொகை உள்ளது.

இதைத்தாண்டி தமிழ்நாடு அல்லது மற்ற எதிர்க்கட்சி மாநிலங்கள் பெரும் முயற்சி எடுத்து ஈர்க்கும் முதலீடுகளையும் குஜராத், உத்தரப் பிரதேசத்திற்கு திசைதிருப்பும் சூழ்ச்சிகளும் கடந்த சில ஆண்டுகளில் நடந்திருக்கின்றன. ஒன்றிய அரசின் இத்தனை வஞ்சனைகளையும் கடந்து தமிழ்நாடு இந்த பெரும் வளர்ச்சியை கண்டிருக்கிறது என்பதுதான் குறிப்பிடத்தக்க சாதனை.

அதேபோல, தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீரழிந்துவிட்டது என்ற அவதூறு பரப்புரையும் இதன்மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது. எங்கே அமைதி நிலவுகிறதோ, எங்கே உட்கட்டமைப்பு வசதிகள் பலமாக இருக்கிறோ, எங்கே அரசின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கிறதோ, அங்கேதான் முதலீடு செய்ய எந்த நிறுவனங்களும் விரும்பும். தமிழ்நாட்டின் சட்டம்- ஒழுங்கு மோசமாக இருக்கிறது என்று வைக்கப்படும் விமர்சனங்கள் உண்மையாக இருந்தால் இந்த வளர்ச்சி எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ்நாட்டின் சட்டம்- ஒழுங்கு முன்பை விட சிறப்பாக இருக்கிறது, அதனால்தான் வளர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சமீபத்தில் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு காவல்துறை இதுதொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டிருந்தது. அதன்படி பார்த்தால் 2019-ஆம் ஆண்டில் 1,745 கொலைகள் தமிழ்நாட்டில் நடைபெற்றிருந்த நிலையில், அந்த எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்து, 2024-ஆம் ஆண்டில் 1,489-ஆக குறைந்துதான் உள்ளது. அதேபோல இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பாக பெருநகரம் சென்னைதான் என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அதேசமயத்தில் சாமியார் ஆதித்யநாத்தின் ஆட்சியில் உத்தரப் பிரதேசத்தின் சட்டம்- ஒழுங்கு ஒட்டுமொத்தமாக சீர்குலைந்துவிட்டதாக உச்சநீதிமன்றமே கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. பாஜக ஆளும் பல மாநிலங்களில் மதவெறி தலைவிரித்தாடுகிறது. ஆனால் தமிழ்நாட்டு பாஜகவினரோ, அவர்கள் ஆளும் மாநிலங்களின் வளர்ச்சியைப் பற்றியோ, சட்டம்- ஒழுங்கு பற்றியோ பேசாமல் அல்லது கவலைப்படாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்தும், சட்டம் - ஒழுங்கு பாதுகாப்பு குறித்தும் தரமற்ற விமர்சனங்களை வைக்கின்றனர். அந்த விமர்சனங்கள் அனைத்தையும் தவிடுபொடியாக்கி இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு.

– பிரகாசு

# சென்னையில் மார்க்ஸ் சிலை!

தமிழ்நாட்டில் காரல் மார்க்ஸ் சிலை திறக்கப்படும் என்று திராவிட மாடல் முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருக்கிறார் சோவியத் சோஷலிச ஆட்சிக்கு எதிரான உள்நாட்டு எதிர்ப்பு புரட்சிகளை உறுதியாக அடக்கியவர் ஸ்டாலின், பெரியார் இயக்கம் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ரஷ்யாவை உறுதியாக ஆதரித்தது அதன் நினைவாகத்தான் கலைஞர் தனது மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் சூட்டினார் சோவியத் பயணம் மேற்கொண்ட பெரியார், ஸ்டாலின் பங்கேற்ற மே தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலகட்டத்தில் தான் ஸ்டாலின் அதிபர் பதவிக்கு வந்தார் எதிர் புரட்சிகளை முறியடித்து சோவியத்தில் சோசியலிசத்தை உறுதிப்படுத்திய ஸ்டாலின் பெயரை த் தாங்கி நிற்கும் உலகின் ஒரே முதல்வர் திராவிட ஆட்சியின் முதல்வர் தான் : காரல் மார்க்சின் சிலையை திறந்து வைக்கும் அறிவிப்பை ஸ்டாலின் வெளியிட்டு இருப்பது மிகச் சிறப்பு; மிகப் பொருத்தம்.

– விடுதலை இராசேந்திரன்

# சட்டங்களே வேண்டாம்; சாஸ்திரங்களே போதும்!

## காஞ்சி சங்கராச்சாரியின் நச்சுக் கருத்துக்கள்(2)

- விடுதலை இராசேந்திரன்

### “பெண்களுக்கு சொத்துரிமை கூடாது”

*பெண்களுக்கு சொத்துரிமை வழங்கினால் ஸ்த்ரி தர்மமே பாழாகிவிடும்அதற்கு வர இருந்த சட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னவர் காஞ்சி சீனியர் சங்கராச்சாரி. நாடாளுமன்றத்தில் நேரு பெண்களுக்கு சொத்துரிமை தரும் மசோதாவை கொண்டு வந்த போது அதை தடுத்து நிறுத்த தீவிர முயற்சிகளில் ஈடுபட்டவர் சங்கராச்சாரி.* இது குறித்து அக்னி கோத்திரம்” ராமானுஜ தாத்தாச்சாரியார் இந்து மதம் எங்கே போகிறது? நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“இதப்பார்த்தீரா.. ஸ்திரிகளுக்கு சொத்துல பாத்யம் கொடுக்கப் போறாளாம். அவாளுக்கு சொத்துல பங்கு கொடுத்தா என்ன ஆகும் தெரியுமா? இஷ்டப்பட்டவா கூட ஸ்த்ரீகள் ஓடிப்போயிடுவா. அபாண்டமா, அபச்சாரமா போயிடும்” -என அந்த பேப்பரை தட்டியபடி வியாக்யானம் தந்து கொண்டிருந்தார் மகாபெரியவர்.

நான் சிரித்தபடி பதில் சொன்னேன். ‘எனக்கு நல்லதுதான். ஸ்வாமி... என் மாமனாருக்கு நிறைய சொத்துகள் இருக்கு. ஒருவேளை என் ஆத்துக்காரிக்கு பங்கு வந்தால் எனக்கும் நல்லதுதான்! -இந்த பதிலைக் கேட்டதும்.

“அசட்டுத்தனமா பேசாதீர். இந்த சட்டம் வந்தா ஸ்த்ரீ தர்மமே பாழாயிடும். ஸ்திரீகளுக்கு பாத்யமோ, சம்பாத்யமோ இருக்கக்கூடாதுன்னு மநு ஸ்மிருதி சொல்லியிருக்கு. ஆம்படையானுக்கு அடிமையாக இருக்கறதுதான் ஸ்த்ரீக்கு அழகு. இப்படிப்பட்ட ஸ்த்ரீ தர்மத்தை நேரு நொறுக்கிட்டார். நாம இதை எதிர்த்து போராட்டம் நடத்தணும். ஸ்த்ரீ தர்மத்தை பாதுகாக்கறதுக்காக அந்த ‘பில்’லை எதிர்த்து ஊரெல்லாம் கூட்டம் போடணும். அதுக்கு ஸ்த்ரீகளை நிறைய திரட்டணும்.

என்றெல்லாம் அவசர ஆணைகளை பிறப்பித்தார் மகாபெரியவர்.

வேத தர்ம சாஸ்திர பரிபாலனசபை கூட்டங்களின் போதே ஸ்த்ரீ தர்மத்தைப் பற்றியும் நான் நிறைய பேசியிருப்பதால் இந்த கூட்டம் நடத்துவது கஷ்டமாக தெரியவில்லை எனக்கும் எங்கள் சகாக்களுக்கும்.

மகா பெரியவர் சொன்னதன்படி திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள கல்லிடைக் குறிச்சிக்கு போனோம். அங்கே தேவி உபாசனை செய்யும் ஒரு அம்மா இருந்தார். அவரிடம் போய், ‘இதுபோல சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கு. பெண்களுக்கும் சொத்து பாத்யம் உண்டுனு சர்க்கார் கொண்டு வந்திருக்கிற சட்டத்தை பெண்கள் மூலமாகவே எதிர்க்கணும்னு மகா பெரியவர் சங்கராச்சாரியார் சொல்லியிருக்கார். அதனால இங்க ஸ்த்ரீகள் கூட்டம்போட வந்திருக்கோம், கூட்டத்துக்கு நீங்களும், ஸ்த்ரீகளை கூட்டி வரணும்’ என்றேன்.

அந்த தேவி உபாசகரோ மறுத்துவிட்டார். பிறகு ஒவ்வொரு வீடாய் போய் பெண்களை பெரிய முயற்சிக்குப் பிறகு கூட்டத்துக்கு அழைத்து வந்து ‘எங்களுக்கு சொத்துரிமை வேண்டாம். மனு ஸ்மிருதியில் உள்ளபடி ஸ்த்ரீ தர்மம் பாதுகாக்கப்படணும், சர்க்கார் இந்த பில்லை வாபஸ் வாங்கணும்’ *என பெண்களை வைத்தே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.*

### “குழந்தைத் திருமணமே சிறந்தது”

*பெண் குழந்தைகளுக்கு ஏழு வயதிலேயே திருமணம் செய்துவிட வேண்டும். சட்டத்தை மீறினாலும் பரவாயில்லை என்கிறார் சங்கிரச்சாரி.*

“காமம் மனஸில் புகுமுன் காயத்திரி புகவேண்டுமென்பதுபோல், காமம் தெரிகிற முன்பே இவள் பதியைக் குருவாக வரித்துவிடும்படி செய்யவேண்டும். காமம் தெரியாவிட்டால்தான் இப்படி குருவாக வகிக்க முடியும்! இந்தப் பெண் குழந்தை சின்ன வயதில் பதியை குரு-தெய்வமாக பாவித்து இருதயத்தை அவனுக்குச் சமர்ப்பணம் பண்ணி விட வேண்டும்.

உசத்தி - தாழ்த்தி, உரிமை (right) ஸ்தானம் (Position) முதலான விஷயங்களைவிட சித்த சுத்தியைப் பெரிதாக நினைத்தால் அப்போது சரணாகதிதான் முக்கியமாகிறது. அதன் வழியாகத்தான் புருஷனுக்கு உபநயனமும் பெண்ணுக்கு விவாஹமும் விதிக்கப்பட்டிருக்கின்றன என்று புரிந்து கொள்ளவேண்டும்.

உபநயனம் மாதிரிப் பெண்ணின் ஏழாவது வயசில் கல்யாணம் பண்ணவேண்டும். அப்போதுதான் சரணாகதி புத்திவரும் - என்று சொன்னால் “இது இந்தக் காலத்தில் ஸாத்தியமா? சட்ட விரோதமல்லவா?” என்று கேட்பீர்கள்.

“ராஜாங்கத்தின் சட்டத்தை மீறு” என்று சொல்லக் கூடாதுதான். அப்படிச் சொல்லவில்லை. சட்ட மறுப்பு (Civil Disobedience) என்று இப்போது ஆட்சி நடத்துகிறவர்களே ஒரு காலத்தில் பண்ணிக்காட்டித்தான் இருக்கிறார்கள். “சட்டம் என்று யாரோ எழுதியதற்காக எங்கள் ஸ்வாதந்திரியத்தை விடமாட்டோம்” என்று அப்போது சொன்னார்கள். அதே மாதிரி “ஜெயிலில் போட்டாலும் பரவாயில்லை; ஆத்ம க்ஷேமத்துக்காக ஏற்பட்ட விவாஹ ஸம்ஸ்காரத்தை வெறும் லவுகீக விஷயமாக்கிச் சட்டம் பண்ணினால் ஏற்க முடியாது” என்று கிளம்புகிற வேகம் நம் ஜனங்களுக்கு இல்லையே என்பது மட்டும் நான் ‘சட்டத்தை மீற வேண்டாம்’ என்று சொல்வதற்குக் காரணமில்லை.” -சங்ககராச்சாரி எப்படி பெண் அடிமையை வலியுறுத்துகிறார். சட்டத்தை மீறுவதற்கு எப்படி தூண்டிவிடுகிறார் என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். - ஆதாரம் தெய்வத்தின் குரல் இரண்டாவது பாகம்.

### “பார்ப்பனர்கள் நாயனம் வாசிக்கக் கூடாது

*பார்ப்பனர்கள் நாயனம், மேளம் வாசிக்கக் கூடாது அதற்கு உரிய ஜாதி பரத ஜாதி இசை வேளாளர்கள் தான் என்கிறார் சங்கராச்சாரி. நாதஸ்வரம், தவில் வாசிப்பதற்கு உடல் பலம் தேவை. பார்ப்பனர்களுக்கு உடல் பலம் இல்லை, எனவே இதற்கு ஜாதி தர்மத்தை வசதியாக இழுத்துக் கொள்கிறார் சங்கராச்சாரி.* தெய்வத்தின் குரல் மூன்றாவது பாகத்தில் இவ்வாறு கூறுகிறார்.

“பிராம்மணனாகப் பிறந்தவன் உள்பட மற்ற எந்த சாதியினரும் பாட்டு, நடனம், நடிப்பு முதலியவற்றைத் தொழிலாக நடத்தப்படாது. அதற்கு ஒரு ஜாதி என்று தொழில்களையெல்லாம் முறைகெட்டுப் போகாதபடி வரம்பு கட்டிக் காப்பாற்றியிருக்கிறது.”- “இதை ஜீவனோபாயத் தொழிலாகவே பண்ணி, பணம், பரிசு, பட்டம் எல்லாம் வாங்க அதிகாரமுள்ளவர்கள் பரத ஜாதியினர்தான்.” -நம் சீமையில் மேளக்கார ஜாதி என்று சொல்வார்கள். இப்போது இசை வேளாளர்கள் என்ற வார்த்தை பத்திரிகைகளில் அடிபடுகிறது என்கிறார்.

### “தமிழ் பேசினால் தீட்டு”

*காஞ்சி சீனியர் சங்கராச்சாரி தமிழில் பேசினால் தீட்டாகிவிட்டது என்று குளியல்(ஸ்நானம்) போடும் பழக்கம் உள்ளவர். இந்த அதிர்ச்சித் தகவலை சங்கராச்சாரி உதவியாளராக இருந்த* அக்னிஹோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் ‘இந்து மதம் எங்கே போகிறது’ என்ற நூலில் கீழ்கண்டவாறு விளக்குகிறார்.

“கும்பகோணத்தில் மாலை நேர பூஜைகளுக்காக மடம் தயாராகிக் கொண்டிருந்தது. மகாபெரியவர் ஸ்நானம் முடித்திருந்தார். மதியம் சிறிது நேரம் தூங்கினால் கூட ‘மடி’ அதாவது ஆச்சாரம் போய்விடும். மறுபடியும் குளித்தாக வேண்டும். அந்த வகையில் குளித்து முடித்து விட்டிருந்தார் மகாபெரியவர்.

அந்த நேரமாய் பார்த்து ஒரு சில பக்தர்கள் அவரைப் பார்த்தேதீருவது, அருளாசி பெற்றேதீருவது என்ற முடிவில் காத்திருந்தார்கள். அவர்களில், நாட்டுக் கோட்டை செட்டிநாட்டிலிருந்து வந்திருந்த அருணாசலம் என்ற பக்தர் மகா பெரியவரை பார்த்து அவரிடம் அருள் மொழிகள் வாங்கி விட்டுத்தான் போவது என்ற உறுதியோடு இருந்தார்.

அந்த நேரம் நானும் மடத்தில் இருந்ததால், அருணாசலத்திடம் சொன்னேன்.. ‘இதோ பாரப்பா, இன்றைக்கு நீ மகா பெரியவரை பார்க்க முடியாது. நாளை வாயேன்.’.. என்றேன். ‘இல்லை சாமி இப்பவே அவரை பார்க்கணும்’ - என்றார் பக்தர்.

எங்கள் பேச்சுச் சத்தத்தை கேட்ட சிலர்... விஷயத்தை மகா பெரியவரிடம் சொல்ல அவர் என்னை உள்ளே அழைத்தார். போனேன். கேட்டார். சொன்னேன். ‘இதோ பாரும் தாத்தாச்சாரி அவரை பாக்கறதுக்கு நேக்கு ஒண்ணுமில்லை... பாத்தால் ஏதாவது கேப்பார், பதிலுக்கு நான் தமிழ் பேசவேண்டிவரும் நோக்குதான் தெரியுமே.. தமிழ் பேசினால் எனக்கு தீட்டு. மறுபடியும் ஸ்நானம் பண்ணனும். பூஜைக்கு நேரமாயிடுத்துல்யோ..அதனால நான் மௌனம் அனுஷ்டிக்கிறேன்னு சொல்லி அனுப்ச்சிடுங்கோ” என என்னோடு சமஸ்கிருத சம்பாஷணை நிகழ்த்தினார் மகாபெரியவர்.

நானும் வெளியே வந்தேன். ‘நான் சொன்னது தானப்பா.. சுவாமிகள் மௌனத்தில் இருக்கார். நாளைக்கு வாயேன்...’ என்றேன்.

‘அப்படியா? தெய்வத்தை இன்னிக்கே பார்க்கலாம்னு எதிர்பார்ப்போட வந்தேன். சரி... நாளை வரை ஏதும் சத்திரத்தில் தங்கிவிட்டு வர்றேன்’ என தாய்மொழியாம் *‘தமிழில்’ மகா பெரியவரை தெய்வமாக மதித்து ஆதங்கப்பட்டுக் கொண்டே சென்றார் அருணாசலம்..*

### “வேத மதம் தான் தமிழ் மதம்”

*முருகனை தமிழ்த் தெய்வம் என்று கூறுவதும் தமிழ் மதம் வேறு வேதம் மதம் வேறு என்று கூறுவதும் தவறு என்று கூறுகிறார் சங்கராச்சாரி.* தெய்வத்தின் குரல் பக்கம் 606-ல் இவ்வாறு கூறுகிறார்.

“முருகனைத் ‘தமிழ்த் தெய்வம்’ என்று குறிப்பாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் இந்தக் காலத்தில் தமிழ் மதம் வேறு, வேத நெறி வேறு என்று பேதம் செய்வதில் சிலருக்கு ருசி இருந்து வருகிறது. இது ஆராய்ச்சி என்று சொல்லிக் கொண்டு நம் ஜனங்களைப் பேதப்படுத்துவதற்காக வெள்ளைக்காரர்கள் செய்த விஷமத்தின் அனர்த்தமான விளைவு. வேத மதம்தான் என்றைக்கும் தமிழ் மதமாக இருந்திருக்கிறது என்பது தான் என் அபிப்பிராயம்.”

### “சங்கராச்சாரிக்கு சரியான பதிலடி”

*வேலைக்கு செல்லும் பெண்களில் 90 சதவீதம் பேர் ஒழுக்கம் கெட்டவர்கள் என்கிறார், சங்கிரச்சாரி ஜெயேந்திர சரஸ்வதி. விதவை பெண்கள் தரிசு நிலம் என்றும் கூறினார்.*

*இது குறித்து எழுத்தாளர் வாஸந்தி (இவரும் பார்ப்பனர்) இந்தியா டுடே’ தமிழ் இதழில் ஹிட்லரும் சங்கராச்சாரியாரும் -பெண்களை இழிவுபடுத்தி மடாதிபதிகள் பேசுவது ஏன்? என்ற தலைப்பில் ஆத்திரம் பொங்க ஒரு கட்டுரையையே எழுதித் தீர்த்தார் இதோ அந்தக் கட்டுரை.*

*”ஹிட்லரும் சங்கராச்சாரியாரும் பெண்களை இழிவுபடுத்தி மடாதிபதிகள் பேசுவது ஏன்?*

*ஆரிய கலாச்சாரத்தை நிலைநாட்டும் வெறி கொண்டிருந்த சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லர் ஜெர்மன் சமூகத்தில் தூய்மையைக் காப்பாற்றும் வகையாக பெண்களை சிந்தர் கூஹே ‘கி’கூஹே, (குழந்தைகள் சமையல் சர்ச்) ஆகியவற்றுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று முழங்கினான். அதாவது,படி தாண்டா பத்தினிகளினாலேயே சமூகத்தின் பண்பாடு காப்பாற்றப்படும். படி தாண்டி விட்டால், பெண்களின் ஒழுக்கம் கெடும் - மதத்தின் பெயரில், அரசியலின் பெயரில் நடக்கும் அராஜகத் தாலும் எதேச்சாதிகாரத்தாலும் கெடாத சமூகம், பெண்கள் வெளியில் சென்றால் கெட்டுப் போகும்.*

*ஹிட்லர் காலம்தான் ஆச்சே என்று நினைக்காததீர்கள் இதெல்லாம் நம்ம ஊர் ஆள் ஹிட்லர் சாயலில் சொன்னது. ஒரு விசுவாசப் படையைக் கொண்ட காஞ்சி மடத்து ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் சமீபத்தில் ஒரு தனியார் தொலைக்காட்சியில் சொல்லியிருக்கிறார். ‘பெண்கள் வேலைக்கும் செல்லக்கூடாது. பணக் கஷ்டத்தால் தான் வேலைக்குச் செல்கின்றனர் என்றால் வீட்டிலிருந்தபடியே சில வேலைகள் செய்து சம்பாதிக்கலாம் (எப்படி? அப்பளம் இட்டா?). “வேலைக்குச் செல்லும் பெண்களில் பத்து சதவீதம் பேர்தான் ஒழுக்கமாக இருக்கின்றனர். நமது பாரம்பர்யத்தைக் கட்டிக்காக்கின்றனர்”*

*காஞ்சி மடத்தில் இப்போ தெல்லாம் இப்படிப்பட்ட ஆய்வுகள் செய்வதில்தான் நேரம் செலவழிகிறது என்று தோன்றுகிறது, சில மாதங்களுக்கு முன்பு விதவைகளை தரிசு நிலம் என்று சுவாமிகள் சொன்னர். இப்போது வேலைக்குச் செல்லும் பெண்களில் 90 சதவீதம் ஒழுக்கம் கெட்டவர்கள் என்கிறார். எப்படி வந்தது இந்தக் கணக்கு? எப்படி அதை நிறுபிப்பார் சாமியார்? பெண்களில் எத்தனை சதவிதம் ஒழுக்கமானவர்களாம்? அதற்கு ஆய்வு உண்டா அல்லது ஆண்களுக்கு ஒழுக்கமே தேவையில்லை என்ற மனுதர்ம ஸ்மிருதிகளை ஆதாரமாக கொள்கிறாரா?*

*சங்கர மடம் நடத்தும் ஒரு பள்ளியில் ஒரு ஆண் ஆசிரியரின் ஒழுக்கத்தைப் பற்றி புகார் வந்த போது ஆசிரியருக்கு வக்காலத்து வாங்கி பேசினவர் தானே?*

*ஸ்மிருதிகளில் பெண்களை அடிமைப்படுத்தும் படியான கேவலப்படுத்தும்படியான பகுதிகளை அகற்றி நல்ல அறிஞர்களைக் கொண்டு முற்போக்குச் சிந்தனைகளுடன் மறுபடி எழுதப்பட வேண்டும் என்று மகாத்மா காந்திசொன்னர் ஆனால் இந்தவேலையை நிச்சயமாக மடாதிபதிகளிடம் விடக் கூடரது என்றும் சொன்னார்*

*தெரியாமல் தான் கேட்கிறேன் இந்த சங்கர மடங்கள் எந்த யுகத்தில் புதைத்திருக்கின்றன? ‘ஆணுக்கும் சற்றும் இளைப்பில்லை என்றே இந்த வையகத்தை ஆள வந்தோம்’ என்ற புதுயுகப் பாய்ச்சலோடு, தரிசனத்தோடு புதுமைப்பெண்ணை வரவேற்றானே 50 ஆண்டுகளுக்குமுன் பாரதி என்ற கவிஞன் அவனைப் பற்றி சங்கர மடத்துக்கு தெரித்திருக்க நியாயமில்லை ‘கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு கட்சிக்கும் அஃதுபொதுவில் வைப்போம்’ என்ற வார்த்தைகளில் சாராம்சமும் இவர்களுக்குப் புரியாது.*

*முற்போக்குச் சிந்தனைகள் இவர்களுடைய எதேச்சாதிகாரத்துக்கு ஒத்து வராததாலேயே பண்பாடு என்ற பசப்பு வார்த்தைகளைச் சொல்லி பலவீனமானவர்களின் சிந்தனையை குழப்புகிறார்கள் வேலைக்குச்செல்லும் பெண்களின் தொலைக்காட்சியின் வழியாக மடத்தின் தலைவர் ஒருவர் இப்படிச் சொல்வது எத்தனை ஆபத்தான விஷயம்? அலுவலகத்திற்குச் செல்லும் மத்திய வகுப்புப் பெண்கள் கையில் மட்டுமே தனது பண்பாட்டைக் காப்பாற்றும் பொறுப்பு இருப்பதாக சுவாமிகள் நினைப்பதும் தெரிகிறது. பணத்தேவைக்காக மட்டுமே பெண்கள் வேலைக்கும் போகிறார்கள் என்று நினைப்பதும் மகா கேலிக் கூத்தாகஇருக்கிறது. சுவாமிகளுக்கு உடனடித் தேவை சரித்திரத்தில் சமூகவியலில் டியூஷன்அது கிடைக்கும் வரை வாயை மூடிக்கொண்டு இருக்கட்டும் பெண்பாவம் பொல்லாதது”.*

*இந்த ஜெயேந்திர சரஸ்வதி தான் மடத்தில் இருந்து இரவோடு இரவாக ஓடிப்போய் போலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு திரும்பி வந்தவர். சங்கரராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

**-நிறைவு**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பேரெழுச்சியோடு நடைபெற்ற பரப்புரைக் கூட்டங்கள்!

***சேலம்: 18/03/2025*** வீரகனூர் பேருந்து நிலையம், பெரம்பலூர் வேப்பந்தட்டை பேருந்து நிறுத்தம், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம், பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. பறை இசை மற்றும் பகுத்தறிவு பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

ஆத்தூர் நகர செயலாளர் கணபதி, பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரைகணபதி, சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், பெரம்பலூர் சுதாகர் ஆகியோர் தலைமை வகித்தனர்.

சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன், தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், ஆத்தூர் நகர செயலாளர் கணபதி, சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரை தாமோதரன் ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரை நிகழ்த்தினர்.

இறுதியாக ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், பெரும்புலியூர் ராகு ஆகியோர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.



ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்ட இணையர்கள் தலைவாசல் வீரகனூர் முத்துக்குமார்-கவிதா ஆகியோர் தோழர்கள் மதிய உணவு மாட்டுக்கறியுடன் ஏற்பாடு செய்தனர். இணையர்களுக்கு கழகத்தின் சார்பாக புத்தகங்கள் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரை தாமோதரன் அவர்களின் மந்திரமா தந்திரமா நிகழ்வு பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. கூட்டத்தை பள்ளி கல்லூரி மாணவர்கள், பெண்கள், பொதுமக்கள் என அனைவரும் ஆர்வமுடன் கவனித்தனர். ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன் மற்றும் நகர செயலாளர் கணபதி ஆகியோரின் அரசியல் நையாண்டி நிகழ்வும் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

***19/03/2025:*** பெரம்பலூர் மாவட்டம் அம்மாபாளையம் பேருந்து நிறுத்தம், அரியலூர் பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகே, R.S. மாத்தூர் பேருந்து நிறுத்தம் பகுதியில் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர்.இசைக் குழுவின் பறை இசை முழங்க கூட்டம் தொடங்கியது. சேலம் மாநகர செயலாளர் தோழர் ஆனந்தி அவர்கள் பகுத்தறிவுப் பாடல்களை பாடினார்.

கூட்டத்திற்கு அம்மாபாளையம் சுதாகர், பாரி சிவக்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர். சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை முன்னிலை வகித்தார்.

தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், கழக மாநில பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திமுக செந்துார் வடக்கு ஒன்றிய செயலாளர் வி.எழில்மாறன், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரை தாமோதிரன், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரை நிகழ்த்தினர்.

இறுதியாக சேலம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன் நன்றிகூற கூட்டம் நிறைவு பெற்றது.

காலை உணவு அம்மாபாளையம் நவீன் உணவக உரிமையாளர் வீராசாமி அவர்கள் வழங்கினார். பாரி சிவக்குமார் தோழர்களுக்கு மதியம் அசைவ உணவு ஏற்பாடு செய்தார்.

4-வது கூட்டம் பொதுக்கூட்டமாக செந்துறையில் பேருந்து நிலையத்தில் மாலை 7.00 மணியளவில் நடைபெற்றது. கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் சிறப்புரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் பரப்புரையின் நோக்கம் குறித்து விளக்க உரையாற்றினார்.

பெரம்பலூர் மாவட்ட செயலாளர் துரை தாமோதிரன் அவர்களின் மந்திரமா தந்திரமா அறிவியல் விளக்க நிகழ்வு பொது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். தி.மு.க வடக்கு ஒன்றிய செயலாளர் எழில்மாறன் அவர்கள் இரவு உணவு ஏற்பாடு செய்திருந்தார். பொதுக்கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள், தோழமை இயக்க தோழர்கள், திராவிடர் விடுதலைக் கழக மாநில மாவட்ட ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தோழர்கள் பொதுமக்கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இரவு தங்கும் விடுதி மற்றும் உணவு ஏற்பாட்டினை பாரி சிவக்குமார் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

***20/03/2025:*** அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் பெருந்து நிறுத்தம், ஜெயங்கொண்டம் குறுக்கு ரோடு, அணைக்கரை, கும்பகோணம் பேருந்து நிலையம் ஆகிய பகுதியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பாரி சிவக்குமார் அவர்கள் தலைமை வகித்தார். தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், தஞ்சாவூர் மாவட்ட துணைத் தலைவர் சோலை மாரியப்பன், முன்னிலை வகித்தனர்.

மேட்டூர் டி.கே.ஆர்.இசைக் குழுவின் பறை இசையுடன் கூட்டம் தொடங்கியது. ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன் அவர்கள் பகுத்தறிவு பாடல்களை பாடினார். கே.ஆர்.தோப்பூர் கண்ணன் அவர்களின் அரசியல் நையாண்டி நிகழ்வு நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாநகரச் செயலாளர் ஆனந்தி, சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, விசிக மு.மா செயலாளர் தமிழருவி, மாநில துணை செயலாளர் பெரியவர் KPS, திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் புலவர் சந்திரசேகரன், ஆடுதுறை நகர பொறுப்பாளர் தளபதி MPS குட்டி, குடந்தை நகர செயலாளர் கலையரசன், பாலு, ஆசிரியர் கூட்டமைப்பு விசிக இடவை இராக.ராமு, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் க.செ.முல்லைவளவன், விடுதலை தமிழ் புலிகள் கட்சி தலைவர் குடந்தை அரசன், பகுஜன் சமாஜ் கட்சி மாநில பொறுப்பாளர் க.இராஜவேல், பகத்சிங், மதிமுக மாநில துணை பொது செயலாளர் ஆடுதுறை இரா.முருகன், மதிமுக ஒன்றிய செயலாளர் இரா.பழனி, நகர செயலாளர் பேரூர் மன்ற மு.துணை தலைவர் இரா.சரவணன், ஆடுதுறை பேரூர் ஆட்டோ இராஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இறுதியாக நன்றியுரை கே.ஆர்.தோப்பூர் கண்ணன், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன் ஆகியோர் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

தோழர்களுக்கு காலை,மதியம் உணவு, தேநீர் பாரி சிவக்குமார் அவர்கள் வழங்கினார்.தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவு விடுதலை தமிழ் புலிகள் கட்சி தலைவர் குடந்தை அரசன் அவர்கள் அவரது இல்லத்திலயே ஏற்பாடு செய்திருந்தார். அவருக்கு புத்தகம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

***21/03/2025:*** திருவிடை மருதூர், திருப்புவனம், ஆடுதுறை, குத்தாளம் ஆகிய பகுதிகளில் காலை 10.00 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தலைமை குழு உறுப்பினர் சக்திவேல், தஞ்சாவூர் மாவட்ட துணை தலைவர் சோலை மாரியப்பன் ஆகியோர் தலைமை வகித்தனர். சேலம் மாநகர செயலாளர் தோழர் ஆனந்தி முன்னிலை வகித்தார்.

மேட்டூர் டி.கே.ஆர்.இசைக்குழுவின் பறை இசை முழக்கத்துடன் கூட்டம் தொடங்கியது. ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன் அவர்கள் பகுத்தறிவு பாடல்கள் பாடினார்.

கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, ஆத்தூர் நகர தலைவர் மகேந்திரன், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு, சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, ப.த.ஆசைத்தம்பி இளைஞர் அணி அமைப்பாளர், RN வாசு குத்தாளம் மேற்கு ஒன்றிய செயலாளர், கருணாநிதி பேரூர் கழக செயலாளர், முஜிபூர் ரகுமான் மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர், ஆதிகேசவன் குத்தாளம் ஒன்றிய துணைச் செயலாளர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள் ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்க நிகழ்த்தினார்கள்.

இறுதியாக கே.ஆர்.தோப்பூர் கண்ணன், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தோழர் தங்கதுரை நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

***22/03/2025:*** மயிலாடுதுறை செம்மனூர் கோவில் அருகில் 22.03.2025 அன்று காலை 10.00 மணிக்கு மேட்டூர் டி.கே.ஆர்.இசைக்குழுவின் பறை இசை முழக்கத்துடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல் தலைமை வகித்தார். தமிழ்நாடு மாணவர் கழக சேலம் மாவட்ட அமைப்பாளர் கவியரசு முன்னிலை வகித்தார். சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் மாவட்ட அமைப்பாளர் அன்பு ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்க உரை நிகழ்த்தினர். இறுதியாக கே.ஆர்.தோப்பூர் கண்ணன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது.

**(எஞ்சிய பயண செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

# கழகத்தோழர் அஜித் - வேணி திருமண விழா!

சேலம் மாவட்டம் காவலாண்டியூரைச் சேர்ந்த கழகத் தோழர் அஜித்- அவருடைய காதல் இணையர் வேணி ஆகியோரின் சுயமரியாதைத் திருமணம் குருவரெட்டியூரில் உள்ள அக்னி மாரியம்மன் திருமண மண்டபத்தில் 12.03.2025 அன்று முன்னாள் அமைச்சர் மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுயமரியாதைத் திருமணத்தை நடத்திவைத்தார். தி.மு.க. மாணவரணி துணைத் தலைவைர் வீரமணி வாழ்த்துரை வழங்கினார். சேலம், சென்னை, ஈரோடு, திருப்பூர், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த கழகத் தோழர்கள் திருமண விழாவில் கலந்துகொண்டனர்.



Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 11, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran